மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்ட 1966-ஆம் ஆண்டு கரும்பு (கட்டுப்பாடு) ஆணையின் 3-வது பகுதியைச் சேர்ந்த (3) உட்பகுதியின்கீழ் (ஆலைக்குக்) கரும்பு சேர்ப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் கரும்புக்குரிய விலை கொடுக்கப்பட வேண்டும். ஆகவே, கரும்பு விலையை உரியகாலத்தில் கொடுக்கத் தவறுகிற ஆலைகள் மீது வழக்குத் தொடருதல், உட்பட கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்திய அரசு இந்த அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. உத்திரப்பிரதேசத்திலும், பீகாரிலும் செய்யப் படுவதுபோல் கரும்பு விலை நிலுவைகளை நிலவரி நிலுவைகளைப்போல் வசூல் செய்யும் பொருட்டு, கரும்பு (வழங்கலையும் கொள்முதலையும் முறைப்படுத்துதல்) சட்டத்தில் விதித்துறைகள் செய்யுமாறு இந்திய அரசு தெரிவித்த கருத்துரை பரிசிலனையிலுள்ளது.

Sugarcane Prices.

* 158 Q.—Thiru K. RAJARAM (on behalf of Thiru V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the State Government have requested the Union Government to fix the sugarcane prices on recovery basis ; and

(b) if so, the details thereof ?

கரும்பு விலைகள்.

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரை அளவை ஒட்டி கரும்பு விலைகளை நிர்ணயிக்க வேண்டுமென்று மாநில அரசு, மத்திய அரசைக் கேட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதுகுறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.